## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(03.08.2022 முதல் 07.08.2022)

**அறிக்கை எண்: 61/2022** **தேதி: 02.08.2022**

### அரியலூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34 °செ முதல் 37 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 23 °செ முதல் 28 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### அரியலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (03.08.2022 முதல் 07.08.2022)

| கடந்த வார வானிலை (29.07.2022 முதல் 01.08.2022) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (03.08.2022 முதல் 07.08.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 29/07 | நாள்-2 30/07 | நாள்-3 31/07 | நாள்-4 01/08 | தேதி | நாள்-1 03/08 | நாள்-2 04/08 | நாள்-3 05/08 | நாள்-4 06/08 | நாள்-5 07/08 |
| 0 | 0 | 0.8 | 1.5 | மழை (மி.மீ.) | 6 | 8 | 8 | 10 | 4 |
| 35 | 34 | 37 | 37 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 34 | 33 | 32 | 32 | 34 |
| 28 | 27 | 25 | 23 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 24 | 24 | 24 | 25 | 25 |
| 7 | 6 | 5 | 6 | மேகமூட்டம் (ஆக்டா) | 6 | 7 | 7 | 6 | 4 |
| 83-58 | 75-63 | 80-50 | 86-73 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 75-65 | 75-65 | 75-65 | 75-65 | 75-65 |
| 6 | 9 | 12 | 22 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 8 | 8 | 12 | 12 | 12 |
| தென் கிழக்கு | தென் தென் மேற்கு | கிழக்கு தென் கிழக்கு | தென் மேற்கு | காற்றின் திசை | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

### அரியலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 03.08.2022 முதல் 07.08.2022 வரை தினமும் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32 °செ முதல் 34 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24 °செ முதல் 25 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 65 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8-12 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | வரும் நாட்களில் மிதமானது முதல் கனமழை பெய்யும் என்பதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும். |
| | | பயிர்களுக்கு உரம் இடுவது மற்றும் பூச்சி மருந்து தெளிப்பதை தவிர்க்கவும். |
| வாழை | | வாழை சாகுபடி செய்யும் விவசாயிகள் வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும். |
| கால்நடைகள் | ஆடு மற்றும் மாடு | எதிர்பார்க்கப்படும் மழையால் கன்றுகள் மற்றும் ஆட்டுகுட்டிகளுக்கு சளி போன்ற உபாதைகள் ஏற்பட்டு நுரையீரல் அழற்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மழை சாரல் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். |

## குறுஞ்செய்தி

வரும் நாட்களில் மிதமானது முதல் கனமழை பெய்யும் என்பதால் வயல்களில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்தவும்.

**இயக்குநர்**